O.S.No.20/2022

வா.சா.1, திருமதி.விஜயா

நாள் : 05.12.2024 நேரம் : 03.29 P.M.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

1)தாவா சொத்து எனக்கு பாத்தியமானது இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து என்பது கடை ஆகும். அந்த கடையை 26.09.2021 க்கு பின்புதாக வைக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி கடை அரசாங்கத்தின் வாய்மொழி உத்தரவின் பேரில் வைக்கப்பட்டுள்ளதாக எனது பிராதில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி கடை வைக்கப்பட்டுள்ள இடம் கமுதி, முதுகுளத்தூர் பிராதான சாலை என்று சொன்னால் சரிதான். கமுதி, முதுகுளத்தூர் பிராதான சாலையில் மேற்படி கடையை வைப்பதற்கு எந்த அதிகாரி, எந்த தேதியில் வாய்மொழி உத்தரவு பிறப்பித்தார் என்றால் யார் என்று எனக்கு தெரியாது. உணவுபாதுகாப்பு தர சான்றிதழ் தற்போது எனது கடைக்கு பெறவில்லை என்றால் சரியல்ல.

2)தற்போது எனது கடை மூடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தற்போது உணவு பாதுகாப்பு தர சான்றிதழ் எனது கடை மூடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தொழில் வரி ரசீது எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

(கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.39 P.M

சாட்சியின் கையொப்பம்.